விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 25 செவ்வாய்க்கிழமை (09.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 21

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## வவுணதீவு இராணுவ முகாம் நோக்கி ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட இந்த எறிகணைகள் இராணுவ முகாமில் வீழ்ந்து வெடித்ததன் காரணமாக இவர்கள் காயமடைந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# பேச்சு மூலம் தீர்வுகாண புலிகள் முன்வர வேண்டும்

## பாலித கோஹன்ன வேண்டுகோள்

(கொழும்பு)

உலக நாடுகள் அனைத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அணி திரண்டு கொண்டிருக்கின்றன. இந் நிலைமையை விடுதலைப்புலிகள் புரிந்துகொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும் என்று அரச சமாதான செயலகத்தின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்தார்.

தற்போது வெளிநாடொன்றுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள (04 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அறிவித்தல்

நாட்டின் தற்போதைய சூழ் நிலை கருதி

**மரணஅறிவித்தல்கள்**

குறைந்த கட்டணத்தில் வலம்புரியில் பிரசுரிக்க முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்.

## மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலையில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளவும் கைது செய்யப்பட்ட மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கற்றல் ,கற்பித்தல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை நோக்கி ஷெல் தாக்குதல் மூன்று பேர் பலி ; 11 பேர் காயம்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வாகரை வைத்தியசாலை வளாகத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் இரு பெண்கள் உட்பட நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பெண்கள் குழந்தைகள் அடங்கலாக 11 பேர்வரை காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் ஏற்கனவே தமது இருப்பிடங்களை விட்டு பல்வேறு இடங்களுக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் தாக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## ஐ.நா.சபை வேண்டுகோள்

(கொழும்பு)

நிட்டம்புவ மற்றும் காலி கொடகம பிரதேசத்தில் இடம் பெற்ற பயணிகள் பேரூந்து குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் மற்றும் மன்னாரில் இடம்பெற்ற விமானத்தாக்குதல்கள் என்பவற்றை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது.

அத்துடன் வாகரையிலுள்ள மக்களின் அவல நிலை குறித்தும் ஐ.நா.சபை கவலை வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் தாக்கப்படுவதை இனியும்

## இராணுவம் சுட்டதில் இளைஞன் உயிரிழப்பு

பொலிகண்டி ஆலடிப் பகுதியில் இராணுவத்தினரை இலக்கு வைத்து கிளைமோர்த் தாக்குதல் நடாத்த முற்பட்ட இளைஞரை தாம் சுட்டுக்கொன்றதாக இராணுவம் அறிவித்துள்ளது.

நேற்று மதியம் ரோந்து நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது

அத்துடன் வாகரையிலுள்ள மக்களின் அவல நிலை குறித்தும் ஐ.நா.சபை கவலை வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் தாக்கப்படுவதை இனியும் பொறுத்துக்கொள்ளமுடியாது என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தையில் மோதல்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பிரதேசத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்றுக் காலை 11 மணியளவில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் மோதல் நடைபெற்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுத (04 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் நேற்று பரவலாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் 5 மணித்தியாலங்களுக்குள் நான்கு இடங்களில் கைக்குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. பிற்பகல் 12.30 மணி முதல் 5 மணி வரையான காலப் பகுதியில் இத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளது.

பொலிகண்டி ஆலயடிப் பகுதி, வைத்தியசாலை வீதியின் முதலாம் கட்டைப் பகுதி, பருத்தித்துறை (04 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று ... படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்த இளைஞர் கிளைமோர்த் தாக்குதல் நடத்த முனைந்ததாகவும் இதனையடுத்து அவர் மீது இராணுவத்தினர் சுட்டதில் அவர் உயிரிழந்ததாகவும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த இளைஞர் படையினரை நோக்கி கைக்குண்டு ஒன்றினை வீசியதன் காரணமாக இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரணமானவர் 20 வயது மதிக்கத்தக்கவர் என்றும் அவரின் சடலத்தை வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# பாடசாலை சேவையில் ஈடுபட்ட பஸ் மாணவர்களால் கொழுத்தப்பட்டது

## கஸ்தூரியார் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சேவையில் ஈடுபட்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று நேற்றுக் காலை மாணவர்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது. நேற்று காலை 8 மணிக்கு கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்தக் கல்லூரிக்கு அண்மையில் வைத்து தீயிடப்பட்டுள்ளது.

மாணவர்களுடன் சென்ற அவ் பஸ்ஸை சம்பவ இடத்தில் வைத்து வழிமறித்து மாணவர்கள் அதன் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர். இதனையடுத்து அப் பஸ்ஸினுள் இருந்த மாணவர்கள் சிதறியடித்தவாறு பஸ்ஸை விட்டு இறங்கி ஓட்டமெடுத்தனர்.

சாரதியும் நடத்துனரும் இயங்கும் நிலையில் நின்ற பஸ்ஸை அவ்வாறே விட்டு தப்பி ஓடினார்.முகங்களை துணிகளால் கட்டியவாறு நின்ற மாணவர்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால்

வடக்கு -கிழக்கு இரண்டு மாகாணங்களாக பிரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பு பிரதேசத்தில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நிர்வாக முடக்கல் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதனால் ஊழியர்கள் வரவின்மை காரணமாக அரச அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. மாணவர்களின் வரவின்மை காரணமாக பாடசாலைகள் இயங்காததோடு, பொதுப் போக்குவரத்து சேவைகளும் நடை பெற வில்லை. (ச-9)

## ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் தடயங்களை ஆராய்கின்றது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் ரவிராஜின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பு வந்திருக்கும் ஸ்கொட்லண்ட் யார்ட் புலன்விசாரணைக் குழுவினர் விசாரணையைத் தொடங்குவதற்கு முன்னதாக உள்ளூர் அதிகாரிகள் திரட்டிய தடயங்களை ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐவரைக் கொண்ட இந்தக் குழுவினர் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக ரவிராஜுக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றனர். குறிப்பாக தொடர்ந்து வந்த மிரட்டல் அழைப்புக்களை அவர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் குறித்து ஆராய அரச பகுப்பாய்வுப் பிரிவுக்கு அவர்கள் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்

### தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

கடத்தப்பட்ட, கைது செய்யப்பட்ட மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது தொடர்பாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

காலங்காலமாக தமிழ் மாணவர்கள் மீது திட்டமிட்ட கல்வி ஒடுக்கு முறையை மேற்கொண்டு வந்த அரசு, தற்போது அதன் உச்சக்கட்டமாக தமிழ் மாணவர்களை கடத்துவதும் கொல்வதுமாக தனது வன்முறைப் பயணத்தைத் தொடர்கிறது.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவன் கந்தையா லதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் ஆகியோர் கடத்தப்பட்டுள்ளனர். இம் மாணவர்களை விடுவிக்கக்கோரி நாம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்த போதும் அதன் பின் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் காந்தியழகன் ஸ்ரீசனாத் கடத்தப்பட்டுள்ளார்.

இச் செயற்பாட்டை சர்வதேச சமூகம் பார்த்தும் பாராமுகமாக இருப்பது எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது.

இன்று முதல் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான முஸ்தீபில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். மாணவர்களின் உணர்வுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் மதிப்பளித்து கடத்தபட்ட மாணவர்களை உடனடியாக விடுப்பதோடு இனிவரும் காலங்களிலும் மாணவர் மீதான வன்முறைகள் தொடராது என்பதற்கு அரசு உறுதியளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## புதிய சட்டமா அதிபராக சி.ஆர்.சில்வா நியமனம்

(யாழ்ப்பாணம்)

சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் சேவை நீடிப்புக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபராக கடந்த ஏழு ஆண்டுகள் சேவையாற்றிவரும் அவர், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியுடன் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இதேவேளை புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதியின் சட்டத்தரணியும் மன்றாடியார் அதிபதியாக இருக்கும் சி.ஆர்.சில்வா நியமிக்கப்படவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## மின்சார நிலையங்களுக்கு இன்று முதல் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டிலுள்ள சகல மின்சார நிலையங்களுக்கும் எரிபொருள் மின்சக்தி அமைச்சின் அலுவலகங்களுக்கும் இன்று முதல் விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஹெறந்தலையில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட கூட்டம் அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு இடையே நேற்று நடைபெற்றது.

இதன்போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் மேலதிக கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவிருக்கின்றது.

அதனடிப்படையில் கொழும்பில் அமைந்துள்ள மின்சக்தி அமைச்சு மற்றும் மின் பொறியியல் தலைமையகம் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அமைச்சின் அலுவலகங்களுக்கு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கென பாதுகாப்புத் தரப்பினரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனுமதியற்ற வாகனங்களும் சந்தேகத்திற்கிடமான வாகனங்களும் அமைச்சுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலையங்களுக்குள் இனி அனுமதிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்திருக்கும் அமைச்சு, சந்தேகத்திற்கிடமான நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ச)

## கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் 18 கடைகளில் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 18 தனியார் கடைகளிற்கு அரிசி, சீனி, மற்றும் பருப்பு என்பன வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தனியார் கடைகளிற்கு வழங்கப்பட்ட பொருள்கள் மூன்று அங்கத்தவர்களுக்குட்பட்ட குடும்பங்களிற்கு 5 கிலோ அரிசி, 2கிலோ சீனி, பருப்பு ஒரு கிலோ என்பன வழங்கப்படவுள்ளது.

மற்றும் நான்கு அங்கத்தவர்கள் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிற்கு 10 கிலோ அரிசி, சீனி 2 கிலோ, பருப்பு ஒரு கிலோ என்பன வழங்கப்படவுள்ளது.

இதேபோன்ற விநியோகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ச-5)

## புலமைப் பரிசில் பெறுபேறுகள்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தியாசாலையில் சித்தி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு;

சி.யகீர்த்தனன்(156), சா.விஜிவர்ணன்(155), சி.சிவதர்ஷன்(154), சி.ஜெயராஜ் (151), ர.லக்ஷன்(150), செ.கஸ்தூரி (142), த.நிஷாந்தன் (140), செ.நிலோஜினி(140), தி.பிரசாத்(139), பி.பவித்திரன்(138), ம.இந்துஜா (138), ப.பஜீத்(137), உ.துஷானா(136). (ச)

## வத்தளையில் மின்மாற்றி தகர்ப்பு

தலைநகர் கொழும்பிலிருந்து வடக்குப் பக்கமாக பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வத்தளையில் அடையாளம் தெரியாத நபர்களினால் மின்மாற்றி ஒன்று தகர்க்கப்பட்டுள்ளது.

வத்தளை மருதானைச் சந்தியில் எலகந்த என்ற இடத்தில் உப நிலையமாகவிருந்த மின்மாற்றியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இக்குண்டு வெடித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு ஒரு கிலோக்கிராம் நிறையுடைய குண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்க பகுப்பாய்வாளர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் குண்டு வெடிப்பின் மூலமே மின்மாற்றி சேதப்படுத்தப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தியதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் குறித்து இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-3,9)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை குகநாதன் (குவம்)

கந்தர்மடம் செல்வநாகபூசணி திருக்கோவிலில்
ஒப்பில்லா மனிதராய் ஒளிவிடும் தீபமாய்
தப்பில்லா வாழ்க்கையாய் தரணியிலே வாழ்ந்தாய்!
செல்வ நாகபூசணிக்கு சேவகன் ஆனாய்
நித்தமும் அம்பாளை பூசித்து வந்தாய்-அதனால்
இன்று சொர்க்கத்தில் வாழும் அதிபதியானாய்
இங்கு நாம் நினைப்போம் என்றும் உம்மை தவமாய்!

சிறுப்பிட்டி அடியார்
கந்தையா குடும்பம்
கந்தர்மடம் அடியார்

09.01.2007 (719)


## 2007 புத்தாண்டு பலன்கள்



### கன்னி

(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1, 2)

*தன்னம்பிக்கைக்கு உதாரணமாகத் திகழும் கன்னி ராசி நேயர்களே!*

உங்கள் ராசியாதிபதி சதுர்த்த கேந்திரத்தில் புத ஆதித்ய யோகம் பெற்று அமர்ந்திருப்பது சிறப்பு. எனவே உங்களின் செயல்கள் சாதனைகளாக மாறும் ஆண்டாகவே இது அமைகிறது.

தொழிலில் விரும்பத் தகுந்த மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். வருமானங்கள் குறையாமல் சேமிப்பு அதிகமாகும். உங்களின் புத்தி சாதுர்யத்தால், முக்கிய பிரமுகர் என்கிற நிலைக்கு உயர்வீர்கள்.

உங்கள் ராசிக்கு பாதகாதிபதியையும், கேந்தி ராபத்ய தோஷத்தையும் பெற்ற குருபகவான் மறைவு பெற்று களத்ர ஸ்தானத்தையும், பாக்ய ஸ்தானத்தையும், இலாப ஸ்தானத்தில் அமர்ந்துள்ள சனிபகவானையும் பார்ப்பதால் தனக்கும் மிஞ்சி, தானம் செய்யும் நிலையை அடைவீர்கள். பிதுரார்ஜிதச் சொத்துக்கள் சிரமமின்றிகைக்கு வந்து சேரும்.

ஆறாம் இடத்தில் அமர்ந்த ராகுவும், விரய ஸ்தானத்தில் அமர்ந்த கேதுவும், உங்களின் எதிரிகளை ஓட ஓட விரட்டியடிப்பார்கள். மேலும் ஆறாம் அதிபதியே பூர்வ புண்யாதிபதியாகி இலாபஸ்தானத்தில் குரு பகவானின் பார்வையைப் பெற்றிருப்பதால், பருத்தி புடவையாய்க் காய்த்தது போல் குழந்தைகளின் வாழ்க்கையில் அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும். அவர்களால் அனுகூலங்கள் இரட்டிப் பாகி, குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

பொதுவாக இந்தப் புத்தாண்டில் உங்களின் வேலைகள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவடையும். அனைவருக்கும் உதவி செய்து பெருமை யடைவீர்கள். பொருளாதார நிலைமை அமோகமாக இருக்கும். அதேசமயம் உற்றார், உறவினர்களின் மனக்கசப்புக்கும் ஆளாவீர்கள்.

உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவார்கள். இருப்பினும் சக ஊழியர்கள் பகைமைப் பாராட்டுவார்கள். அதனால் அவர்களிடம் எச்சரிக்கையுடன் பழகவும். அதே நேரத்தில் அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தி செயலாற்றினால் தோல்விகளில் இருந்து தப்பிக்கலாம்.

வியாபாரிகளைத் தேடி வர வேண்டிய பணம் வந்து சேரும். கூடுதலாக உழைத்து மன உறுதியுடன் செயல்பட்டு, வருமானத்தை மேலும் பெருக்குவீர்கள். நண்பர்கள் உதவிக் கரம் நீட்டுவார்கள். குறிப்பாக மக்கள் விரும்பும் பொருட்களை விற்பனை செய்து இலாபத்தை அள்ளவும்.

விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அதோடு மகசூல் அதிகரிக்க நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள். புதிய நிலம் குத்தகைக்கு வந்து சேரும். சுப காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை இந்த ஆண்டு பொதுச் சேவையில் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். கட்சி மேலிடத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் உங்களை புதிய பதவிகளும் தேடிவரும். எதிரிகளும் உங்களிடம் அடங்கியே நடப்பார்கள்.

கலைத்துறையினரைத் தேடி, புதிய ஒப்பந்தங்கள் தாமதமாக வந்து சேரும். ரசிகர்களின் ஆதரவும் குறைந்த அளவே காணப்படும். எனவே ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்ய நேரிடலாம். அதோடு வேலையில் கவனமும், செயல்பாட்டில் நிதானமும் தேவை.

இந்த ராசி பெண்மணிகளுக்கு குழந்தைகளால் பெருமை கிடைக்கும். அதேநேரம் கணவரிடம் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். அதனால் பொறுப்புடனும், நிதானத்துடனும் நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

மற்றபடி பொருளாதார நிலைமையில் எந்தக் குறைவும் ஏற்படாது.

மாணவமணிகள் படிப்பில் கவனத்துடன் ஈடுபடவும். அதே சமயம், இப்படி உழைப்பவர்கள் சிலர் "முதல்ரேங்க்" வாங்குவார்கள். விளையாட்டிலும் வெற்றி பெறுவார்கள்.

*பரிகாரம்:*-சாஸ்தாவை வழிபட்டுப் பயன்பெறவும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் "ஐயப்பா" என்று கூறி வரவும்.

(தொடரும்)

பொதி சுமக்கும் கழுதையினிடத்திலும் நல்ல குணம் உண்டு. பொறுமையோடிருக்கும் நல்ல நீரைக் குடிக்கும் எவிடத்தும் சில நல்ல குணங்கள் இருக்கும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# 2007 ஆம் ஆண்டு மற்றுமொரு 1987

இந்தியப் படையினரின் வருகை இவ்வருடத்தில் நிகழும் சாத்தியம் உண்டென சிங்கள நாளேட்டின் ஆசிரியர் தலையங்கம் ஒன்று தெரிவிக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் மற்றுமொரு நாட்டின் படை பலத்திற்குள் சிக்குண்டு கீழ் நிலைப்பட்டுப்போனது.

இத்துர்ப்பாக்கிய நிகழ்வு 1987 ஆம் ஆண்டில், இந்திய அமைதிப் படையின் வருகையுடன் ஏற்பட்டதாகக் கூறும் அந்த சிங்கள நாளேடு, 2007 ஆம் ஆண்டும் மற்றுமொரு 1987 ஆம் ஆண்டாக மாறும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இந்திய அமைதிப் படையின் வருகை தமது இறைமைக்குப் பங்கம் விளைவித்துவிட்டது என ஆதங்கப்படும் குறித்த சிங்கள நாளேடு, இந்திய அமைதிப் படையால் ஈழத் தமிழர்கள் அனுபவித்த துன்பதுயரங்களைப் பற்றி எதுவுமே பேச மறந்துபோனது.

ஆக, சிங்கள தேசம், சிங்கள மக்கள் என்ற குறுகிய சிந்தனையுடனேயே குறித்த சிங்கள நாளேடு செயற்படுகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது செய்து கொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வரவேண்டியதாயிற்று.

உண்மையில் இந்திய அமைதிப் படையின் வருகையால் இலங்கை இராணுவம் பாதுகாக்கப்பட்டது.

இந்த உண்மையை மறந்து-மறைத்து இந்திய அமைதிப் படையின் வருகையால் இலங்கையின் இறைமை ஆபத்தான கட்டத்திற்குத் தள்ளப்பட்டதாகக் கூறுவது மிகப் பெரும் பொய்யாகும்.

இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்ததன் நோக்கம் வேறுபட்டதாக இருப்பினும், ஈழத் தமிழர்களுடன் அமைதிப் படை நடந்து கொண்ட விதம், அதனால் அமைதிப் படைக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட யுத்தம் என்பன தமிழர்களின் விடயத்தில் பல்வகை எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது எனலாம்.

குறிப்பாக அமைதிப் படை இந்தியாவிற்கு திரும்பியதன் பின்னரும் ஈழத் தமிழர்களுடனான இந்திய உறவு பாதகமாகவே அமைந்தது.

இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு வரவழைத்ததும் அவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தத்தை ஏற்படுத்தியதும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசியல் முதிர்ச்சியின் முனைப்பு என அப்போது புகழாரம் சூடிய தென்னிலங்கை ஊடகங்கள் இப்போது சுருதியை மாற்றத் தொடங்கியுள்ளன.

87 ஆம் ஆண்டில் இந்தியப் படை இலங்கைக்கு வந்ததுபோல் 2007 ஆம் ஆண்டிலும் அதேபாணியில் இந்தியப் படை இலங்கைக்கு வரும் சாத்தியம் உண்டென்று தென்னிலங்கை ஊடகங்கள் போடும் ஓலத்திற்கும் காரணம் இருக்கவே செய்கின்றன.

அதாவது 2007 ஆம் ஆண்டில் இந்தியப் படை இலங்கைக்கு வருமாயின், அது 87 ஆம் ஆண்டின் வருகையிலிருந்து வேறுபட்டதாக வேயமையும். அத்தகையதொரு நிலை ஏற்படுமாகவிருந்தால் இலங்கையின் இறைமை-சுதந்திரம்-ஒற் றையாட்சி என்பனவற்றிற்குப் பங்கம் ஏற்பட வே செய்யும்.

எனவே அதனைத் தடுத்து நிறுத்துவதாயின், தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதும், தீர்வுத் திட்டம் முன்வைப்பதுபோல அரைகுறை முடிபுகளை வெளிப்படுத்துவதும் தேவையானது என குறித்த ஊடகங்கள் கருதுகின்றன.

அதன் ஒரு வகைமையே 87 ஆம் ஆண்டில் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை 2007இல் நிகழும் என்ற சிங்கள நாளேட்டின் ஆரூடமாகும்.

# கல்வியியலாளர் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் தெரிவானோர் விபரம்

## ஒன்பது கட்டமாக நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

இலங்கை கல்வியியலாளர் சேவையின் மூன்றாம் வகுப்பின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் நாள் என்பனவற்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஆனால் நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் அறிவிக்கப்படவில்லை. இதன் பிரகாரம் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

எஸ்.சுதாகரன், கே.விக்னேஸ்வரி, ஜி.சுரேஸன், எஸ்.அந்தோனி தவச்செல்வம், ஐ.செல்வநாயகம், கே.பாஸ்கரன், எம்.ஆனந்தராஜா, ரி.ஞானசுந்தரன், வி.கார்த்திகேயன், எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை , பி.தனபாலன், வி.குமரவேற்பிள்ளை, எஸ்.தயாபரன், யு.கௌதமி, என்.தயாளன், எம்.முரளிதரன், என்.மனேரஞ்சிதன், கே.சுபாஸ்கரன், எஸ்.சேனாதிராஜா, ஏ.ரவீந்திரன், கே.சத்தியபாலன் ஆகியோரும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

எஸ்.சுரேந்திரன், ஐ.விக்னேஸ்வரன், கே.ஹரிஹரசக்தி, வி.கணேஸ்வரன், எஸ்.டிகுமார், எம்.ஹம்சநந்தி, ரி.திலீபா , கே.தர்மராஜா, எஸ்.கிருபாகரன், பி.பாலகணேசன், எஸ். பத்மராஜா, எம்.புலேந்திரராஜா , ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோரும், 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

ரி.தேவதயாளன், எஸ்.முகுந்தன், ரி.மோகன், எம்.பிரபாகரன், பி.ராமகிருஷ்ணன், எஸ்.ஜெயராஜா , எம்.இராசலிங்கம், பி.சற்குணநாதன் ஆகியோரும் தோற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

வி.கருணாலிங்கம், எம்.ஈ.பி.மரியதாசன், எஸ்.சூரியகுமார்,ஜி.கணேசநாதன், பி.வேல்நிதி, வி.விஜிதா , எஸ்.தயாபரன், கே.ஸ்ரீகாந்தவேல், எஸ்.யசோதரா, ரி.இளங்குமரன், கே.திலகநாதன், எஸ்.சுந்தரேஸ்,ஜெ.தர்மஜீலன், கே.கிருஷ்ணயோகன்,எஸ்.மதியழகன் ஆகியோரும்,26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு,

கே.புஷ்பராஜா, எம்.வரதராஜன், ஜெ.உதயகுமார், ரி.சுயந்தினி,எஸ்.லாலீசன், ஆர்.சத்யா , ஆர்.எம்.சத்யகுமார், எச்.சுபிதா , ஆர்.நவகேதீஸ்வரன், பி.கலையரசன், கே.குகதாஸன், எஸ்.பாலராணி,ஏ.விமலராஜா , பி.ஸ்ரீகுமரபரன் ஆகியோரும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

கி.பரணிதரன், எஸ்.சாந்தி, பி.சசிகலா, எஸ்.சிவலோசினி, என்.நாககேந்திரன், ஏ.குகன், ரி.தவநேசன், ஆர்.கேதீஸ்வரி, வி.குலசேகரம், கே.இரவீந்திரா, ஆர்.உதயராஜ்,வி.ஜெனார்த்தனகுமாரி, கே.ராஜகுமார், என்.கந்தவனச்செல்வன், கே.கேதீஸ்வரன், வி.ஞானசெல்வி, ஜெ.திருமூர்த்தி, தி.கோபாலகிருஷ்ணன், ரி.ஜெயந்தினி, பி.பிரியதர்ஷினி ஆகியோரும் தோற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேசமயம் மாசி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்நேர்முகப் பரீட்சைக்கு,

என்.ஹரிஹரகணபதி, ஆர்.விஜயதீபன், பி.மாலதி, வி.தனுஷா, ஏ.அருள்ரஞ்சினி, ஏ.பிறேம்குமார், கே.சாளினி, வி.சசிகுமார், எஸ்.சுகந்தினி,என்.வில்லியம் சாந்தகுமார், ஏ.உதயகுமார்,எஸ்.செந்தூரன், ஆர்.குமரன், எஸ்.ராஜகுமார், ரி.குகாஜினி,வி.திலீபன்,ஈ.அகல்யா ஆகியோரும், மறுநாள் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு,

ஆர்.துஷ்யந்தன், பி.கிருபானந்தன், எஸ்.சிவகுமார், எஸ்.ஆனந்தகுமார், கே.ருஹுணன், எஸ்.திருவிளங்கம், என்.ஆனந்தகுமார், கே. ஜெயகௌரி,எஸ்.மாணிக்கம் ஆகியோரும் தோற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மாசி மாதம் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு,

என்.வனிதா, எஸ்.திவாகரன், எஸ்.ஸ்ரீசுந்தரராஜா , சி.நாகேந்திரன், வி.தற்பரன், எஸ்.தனஞ்சயன், ஆர்.தனஞ்சயன், பி.அரவிந்தன், வி.எஸ்.குணசீலன், கே.செந்தில் வடிவேல், பி.விஜயகுமாரன், ரி.வாசுகி, ஏ.சிவகுமாரன், கே.தவராஜா ஆகியோர் தோற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-5)

# குடாநாட்டில் உரம் இன்மையால் மரக்கறி பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சி

## விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மரக்கறி பயிர்களுக்குத் தேவையான உரம் இன்மையால் மரக்கறிகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் உச்சத்தை எட்டியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் விவசாயிகளுக்குத் தேவையான உரம் உரிய திணைக்களங்களினால் எடுத்து வந்து விநியோகிக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நெற்செய்கைக்கு மட்டுமே கப்பல் வந்த மூலம் உரம் தேவையிலும் பார்க்க குறைந்தளவே விநியோகிக்கப்பட்டன. எனினும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு விவசாய திணைக் களமோ அல்லது கமநல சேவைகள் திணைக்களமோ உரத்தினை விநியோகிக்கவில்லை என கமக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பெரும்பாலான கமக்காரர்கள் இம்முறை மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவில்லை எனத் தெரியவருகின்றது. இந்நிலையில் யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றன. சாதாரண காலகட்டத்தில் ஜனவரி மாதமளவில் மரக்கறிகளின் விலைகள் குறைவாகவே காணப்படும்.

ஒரு கிலோ கத்தரிக்காய் 280 ரூபாவாகவும் பயிற்றங்காய் 180ரூபாவாகவும் வெண்டிக்காய் 120 ரூபாவாகவும் பூசணிக்காய் 200 ரூபாவாகவும் தக்காளி 240 ரூபாவாகவும் பச்சைமிளகாய் 300 ரூபாவாகவும் கருணைக்கிழங்கு 200 ரூபாவாகவும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. கீரை மற்றும் கரட் விலைகளில் வீழ்ச்சி காணப்படுகின்றது.

இதேவேளை தேங்காய் ஒன்று 85 ரூபா முதல் 120 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஆரம்பத்தில் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதமளவில் 50 ரூபாவிற்கு விற்கப்பட்ட தேங்காய் இரு மடங்காக உயர்ந்தமைக்குக் காரணம் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியேயாகும். (ச)

# தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு நானாவிதப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தைப் பொங்கலை முன்னிட்டு அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நானாவிதப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

குடும்பம் ஒன்றிற்கு தீட்டல்பச்சையரிசி ஒருகிலோ, ஒரு கிலோ சர்க்கரை, அரைலீற்றர் தேங்காய் எண்ணெய்,அரைக் கிலோ புளி, பெருஞ்சீரகம் காக்கிலோ,நற்சீரகம் காக்கிலோ, கடுகு காக்கிலோ, மஞ்சள் காக்கிலோ, மிளகு காக்கிலோ, அவல் ஒருகிலோ, உப்பு ஒரு பைக்கெற் என்பனவற்றுடன் நான்கு அங்கத்தவர் வரையான குடும்பத்திற்கு செத்தல் மிளகாய் அரைக்கிலோ, மல்லி அரைக்கிலோ வழங்கப்படவுள்ளது.

ஐந்து அங்கத்தவர்களும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிற்கு செத்தல் மிளகாய், மல்லி என்பன ஒரு கிலோவும் வழங்கப்படவுள்ளது. (ச-5)

# இடம்பெயர்ந்த மக்கள் உள்ளதால் பாடசாலை ஆரம்பிப்பதில் சிக்கல்


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையிலிருந்து இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளால் சில பாடசாலைகளை ஆரம்பிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

மட்டு.மாவட்டத்தில் கற்குடாவலயத்தில் 19 பாடசாலைகளிலும் பட்டிருப்பில் 2 பாடசாலைகளிலும் மட்டக்களப்பில் 20 பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளனர்.

அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்ட போதும் மட்டக்களப்பில் மாத்திரம் ஐந்து பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ.போல் தெரிவித்துள்ளார்.

இப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு மாற்று இடம் கிடைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை பாடசாலைகளிலிருந்து நலன்புரி நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ள வாகரை மக்கள் அடிப்படை வசதிகள் பூரணமாகக் கிடைக்காத நிலையில் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகிவருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ச)


பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து நேற்று காலை கஸ்தூரியார் வீதியும் கல்லூரி வீதியும் இணையும் சந்திக்கு அண்மையில் வைத்து தீயிட்டு எரிக்கப்பட்ட நிலையிலுள்ளதனையும், அணைக்கும் பணியில் யாழ்.மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் மேற்கொண்டு வருவதனையும் படங்களில் காணலாம். (படங்கள் : திலீவின்பன்)

# குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு நட்டஈடு வழங்க அரசு நடவடிக்கை

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிட்டம்புவ, சீனிகம போன்ற இடங்களில் பயணிகள் போக்குவரத்து பஸ்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் பலியான, காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆக குறைந்தது ஒரு இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குவதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிட்டம்புவையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியான காயமடைந்தவர்களின் குடும்ப உறவினர்களுக்கு முதல் கட்டமாக 50 ஆயிரம் ரூபாவை வன்னிமாவட்ட மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதுர்தீன் நேற்று வழங்கி வைத்துள்ளார்.

மீதி தொகை விரைவில் வழங்கப்படும். அத்துடன் சீனிகமவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியான காயமடைந்த குடும்பங்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ்களில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறுகுண்டு வெடிப்பு சம்பவங்களில் 21 பேர் பலியானதுடன் 94க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடமராட்சியில்...

ஹட்லிக்கல்லூரியின் நுளைவாயில் மற்றும் கரவெட்டி வதரிப்பகுதிகளி லேயே இந்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ள தாக கூறப்படுகின்றது.

எனினும் இந்த தாக்கு தல்கள் குறித்து இதுவரை தமக்கு தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என தேசிய பாதுகாப்பு மையம் நேற்று தெரிவித்துள்ளது. (ச-3,52)

## வாகரை நோக்கி ஷெல்...

இடம் பெயர்ந்து தற்போது வாகரை மருத்துவமனைப் பிரதேசம் பாது காப்பானது என்ற நம்பிக்கையில் தஞ்சம டைந்தனர் என்று கூறப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வாகரை வைத்தியசாலையின் வைத்தி யர் டி.வரதராஜா பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம் பெயர்ந்து வந்து வைத்தியசா லையை சூழவுள்ள பிரதேசத்தில் முகாமிட்டு இருக்கின்றார்கள்.

அப்படியிருக்கும் போது நேற்று 1.30 மணியளவில் எறிகணைகள் வைத்தியசாலை வளாகத்தில் வீழ்ந்து வெடித்ததில் அந்த இடத்திலேயே இருவர் உடல் சிதறிப் பலியாகினர். 11 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் இரு சிறுவர்கள், நான்கு பெண்கள் உட்பட மொத்தமாக 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்ட பின் ஒரு பெண்மணி உயிரிழந்துள்ளார் என்று கூறிய அவர் காயமடைந்தவர்களில் சிலரை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நாடப்பட்டபோதும் அது கிடைக்கப்படவில்லை என்றும் கூறினார்.

மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட வேண்டி இரு சிறுவர்களும் பெண்களுமாக நான்கு பேரை கடல் வழி மூலம் அனுப்பி வைத்துள்ளோம். இவ்வாறு மட்டக்களப்பு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட பெண்ணொருவர் பின்னர் அங்கு மரணமடைந்திருக்கின்றார்.

மக்கள் பெரும் பீதியுடன் வைத்தியசாலை கட்டடத்துக்குள் அனைவரும் தஞ்சமடைந்து ஒதுங்கியிருக்கின்றனர். மிகுந்த அவலத்துடனும் பயத்துடனும் பதுங்குழிகளுக்குள்ளும் புதிதாக பதுங்கு குழி வெட்டப்பட்டு வருபவர்களுமாக, என்ன செய்வதெனத் தெரியாத நிலையில் அவர்கள் பயத்துடன் வாழ்ந்து வருவதாக அவர் கூறினார். (ச-3)

# வவுனியா நேரியகுளம் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

வவுனியா செட்டிக்குளம் நேரியகுளம் பகுதியில் வீடொன்றில் நித்திரையில் இருந்த குடும்பஸ்தர் அருளப்பு தர்மேந்திரன் (வயது 38) என்பவரை இரவு ஒன்றரை மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத மூவர் வெளியில் அழைத்து சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இறந்தவரின் சடலம் வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்து அதனைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியனிடம் இறந்தவரின் மனைவியான வதனா இரவு ஒன்றரை மணியளவில் தமது வீட்டிற்கு வந்த இனந்தெரியாத மூவர் கணவனை வெளியில் அழைத்து வந்ததாகவும் அவரை ஒன்றும் செய்ய வேண்டாம் என அழுது வேண்டிய போதிலும் தனது எதிரிலேயே அவர்கள் தனது கணவரைச் சுட்டுக்கொன்றதாகவும் தெரிவித்துள்ளார். (ச)

# போக்குவரத்துச் சபைக்கு ஐந்து பஸ்கள் கையளிப்பு

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 5 பஸ்கள் லங்கா முடித்த கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டது. எடுத்து வரப்பட்ட பஸ்கள் இராணுவத்தினால் பொறுப்பேற்கப்பட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாண டிப்போவில் கையளிக்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சமூகசேவை சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரினால் பஸ்களின் திறப்புகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டன. (ச)

## பாடசாலை...

பஸ்ஸினுள் ஏறி அதனைச் சேதப்படுத்தினர்.

அதன் பின் தீயிட்டுக் கொழுத்தினர். தீயினால் பஸ் எரிந்து கொண்டிருந்தபோது சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் பஸ் முழுமையாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத் தினையடுத்து கஸ்தூரியார் வீதி ஆள் நடமாட்டமின்றி வெறிச்சோடியது. யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பஸ் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ-3,9)

## ஓமந்தையில் மோதல்...

லின்போது விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் சீருடையுடன் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து வவுனியா மாவட்ட நீதிபதியின் உத்தரவுக்கமைய சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.சடலத்தின் உடைமையிலிருந்து ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றும், மகசீன் ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் சில உணவுப் பொட்டலங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து வவுனியா குற்றப்பிரிவு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் தர்மராசா, இராணுவ பொலிஸ் அதிகாரி மேஜர் வீரசிங்க ஆகியோர் நீதிபதியிடம் காட்டியுள்ளனர். (ச)

## மாணவர்களின் விடுதலையை...

செயற்பாடுகளை மேற்கொள்ள முயலும் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி யுள்ளது.

இதனை வலியுறுத்தியும் கைது செய்யப்பட்ட எமது மாணவர்களான பகீரதன்,சசிக்குமார்,நிருபராஜ் ஆகியோரின் விடுதலையை முன்னிறுத்தியும் எமது ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் என்பன கூடி கலந்துரையாடின. இதன் விளைவாக எமது பாதுகாப்பை வலியுறுத்தியும் கைது செய்யப்பட்ட மாணவர்களின் விடுதலை தொடர்பாகவும் கவனயீர்ப்பு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.அதன் பிரகாரம் இன்று ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கடமைக்கு சமூகமளிக்காது குறித்த மாணவர்களின் பாதுகாப்பு, இயல்பான கற்றல் செயற்பாடு, மாணவர்களின் விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம். (எ)

## பொதுமக்கள் தாக்கப்படுவதை...

அண்மையில் கொழும்பில் 20 உயிர்கள் வரை பழிவாங்கிய பேருந்து குண்டுவெடிப்புக்களை சுட்டிக்காட்டியிருக்கும் அந்த அறிக்கை பாதிப்படையக்கூடிய மக்களில் அதிக பாதிப்படையக்கூடியவர்கள் வாகரையில் வாழும் மக்கள் என்று தெரிவித்துள்ளது.

வாகரை மக்களுக்கு உதவ ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் தயாராக உள்ளன. ஆனால் வாகரைக்கு மனிதாபிமான உதவிகள் செல்ல வழியில்லை.

தொடர்ச்சியான எதிர்ப்புக்களை அடுத்து கடைசியாக இரண்டு வாரத்துக்குத் தேவையான மனிதாபிமான உதவிப் பொருட்கள் நவம்பர் 29 ஆம் திகதி வாகரைக்குச் சென்றன என்று அந்த அறிக்கை கூறியது.

வேண்டுமென்றே பொதுமக்கள் மீது இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் சபை கண்டிக்கிறது. 20 பேருக்கு அதிகமாக மரணமடைந்து, பலர் காயமடைந்த,

அண்மைய நடைபெற்ற பேருந்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து வேதனை அடைகிறது. நாடுமுழுவதும் பொதுமக்களுக்கு பாதுகாப்புத் தேவை என்று ஐக்கிய நாடுகள் சபை அறைகூவல் விடுக்கிறது. வாகரையில் நிலைமை படுமோசமாகி வருகிறது. இது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியது. இருப்புகள் தீர்ந்துவிட்டதால் 15 ஆயிரம் வரையிலான மக்கள் அங்கு உணவோ மற்றும் அடிப்படை வசதிகளோ இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.கடந்த நவம்பர் 29 ஆம் திகதி கடைசியாக உதவிப் பொருட்களை செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு பிறகு வாகரை செல்ல மனிதாபிமான அமைப்புக்களுக்கு அனுமதியில்லை.

வாகரையில் அகப்பட்டுள்ள மக்களுக்கு உதவ நாங்கள் தயாராகவுள்ளோம். இவர்கள் பாதிப்படையக்கூடிய மக்களில் அதிக பாதிப்படையக்கூடியவர்கள் எப்போதும் முதியவர்கள் -நோய் வாய்ப்பட்டவர்கள் -உடல் குறைபாடுள்ளவர்கள் என மிகவும் பலவீனமாக உள்ளவர்களே பின்னால் தங்கி விடுவார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

அவர்கள் இன்னமும் உணவோ, அவசர மருத்துவ சேவையோ, தங்குவதற்குக் கூரையோ இல்லாமல் இருப்பதுடன் தொடர்ச்சியாக தாக்குதல்களின் மத்தியில் மாட்டிக்கொண்டுள்ளார்கள் என்று இடைக்கால அலுவலக அதிகாரியும் மனிதாபிமான உதவிகள் ஒருங் கிணைப்பாளருமான அமின் அவார்ட் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் வாழும் 70 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களின் அடிப்படை மனிதாபிமானத் தேவைகளில் உதவவும் அவர்களைப் பாதுகாக்கவும் அரசசாங்கத்தை ஆதரிக்கும் பரவலான நடவடிக்கைகளை உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் பங்காளி அமைப்புக்கள் வழியாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே அதிகம் செய்து வருகிறது.

மேலும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு இடம்பெயர்வுக்கான வழிகாட்டிக் கொள்ளைகள் குறித்து பாதுகாப்பு சபை தீர்மானங்களில் குறிக்கப்பட்டுள்ளபடி அனைத் துலக மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தில் உள்ள கடப்பாட்டை இருதரப்புக்கும் ஐக்கிய நாடுகள் சபை நினைவுறுத்துகி றது இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கிறது. (ச-3,5)

## பேச்சு மூலம்...

பாலித கோஹன்ன நாட் டின் தற்போதைய இக்கட்டான நிலைமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

விடுதலைப்புலிகள் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். புலிகள் சிவிலியன்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்வதாக அறிகின்றேன்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண புலிகள் முன்வரவேண்டும். இதனை நான் கோரிக்கையாக முன்வைக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை செயற்பாட்டு ரீதியில் தீர்த்துவைக்க வேண்டுமானால் விடுதலைப்புலிகள் வன்முறைகளை நிறுத்தவேண்டும் என அவர் கூறியுள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.